ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1842/16 - 2013 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.12.27

*1842/16 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2013, திசெம்பர் 26.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் கப்பற்றொழில் முகவர்கள் கப்பற் சரக்கனுப்புநர், கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமெனபதுடன், 2014 ஆம் ஆண்டு சனவரி 6 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*2. (1) கப்பற்றொழில் முகவர், கப்பற் சரக்கனுப்புநர், கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர், கொள்கலன் செயற்படுத்துநர் அல்லது கப்பற் சரக்குத் திரட்டுநர் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவாறான (இதனகத்துப்பின்னர் "உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமமளிக்கப்பட்ட கப்பற்றொழில் முகவர், கப்பற் சரக்கனுப்புநர், கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் ஒவ்வொருவரும், பண்டங்களின் அனுப்பு பொருட்டொகுதிக்கு, 'கப்பற் சரக்குக் கட்டணம் முற்செலுத்தப்பட்டது' அல்லது 'கப்பற் சரக்குக் கட்டணம் சேகரிக்கப்படுவதற்குரியது' எனக் குறித்துரைக்கின்ற தெளிவான ஏற்று பொருட் பட்டியலை வழங்குதல் வேண்டும்.*

*(2) பண்டங்களின் அனுப்புபொருட்டொகுதி 'பூச்சியக் கப்பற் சரக்கு கட்டணத்தைக்' கொண்டதென்றவாறு ஏற்று பொருட் பட்டியலெதுவும் குறித்துரைத்தலாகாது.*

*3. (1) புறப்படும் இடத்திலிருந்து சேரிடம் வரைக்குமான போக்குவரத்து ஆவணத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கான முழுச் செலவையும் மேவுகின்ற கொள்கலனிலிடப்பட்ட கப்பற் சரக்கின் மீதான எல்லாக் கட்டணங்களும், ஏற்று பொருட்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டுமெனபதுடன், அது, அதனைச் செலுத்துவதற்கு ஒப்பந்த ரீதியில் பிணிக்கப்பட்டவாறாகவுள்ள திறத்தவரிடமிருந்து அறவிடப்படுதலும் வேண்டும்.*

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட "எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணம்" அவசியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) முழுக் கொள்கலச் சுமையின் மீதான கட்டணங்கள் ;

(ஆ) முடிவிடக் கையாளுதற் கட்டணங்கள் ;

(இ) ஏற்று பொருட் பட்டியலை அல்லது கப்பற் சரக்கனுப்புநரின் கப்பற் சரக்குப் பற்றுச்சீட்டை வழங்குவதற்கான கட்டணங்கள் ;

(ஈ) கொள்கலன் சுமைக்குக் குறைவான கப்பற் சரக்கின் மீதான கட்டணங்கள் (ஏற்புடையதாயின்) ;

(3) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, கொள்கலனிடப்பட்ட கப்பற் சரக்கை ஏற்றிச் செல்லல் தொடர்பாக 'புறப்படுமிடத்திலிருந்து சேரிடம் வரை' என்பது, பின்வருவனவற்றிலிருந்து பண்டங்களை ஏற்றிச் செல்லல் என்று பொருளாகும் :-

(அ) கொள்கலன் முற்றத்திலிருந்து கொள்கலன் முற்றத்துக்கு ; அல்லது

(ஆ) கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்திலிருந்து கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்திற்கு ; அல்லது

(இ) கொள்கலன் முற்றத்திலிருந்து கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்திற்கு ; அல்லது

(ஈ) கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்திலிருந்து கொள்கலன் முற்றத்திற்கு.

4. உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் எவரும், ஏற்று பொருட் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு புறப்படுமிடத்திலிருந்து சேரிடம் வரைக்கும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்காக ஒழுங்குவிதி 3 (1) இற்கு அமைவாக இறக்குமதியாளர் ஒப்பந்த ரீதியில் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எல்லாமடங்கிய கப்பற்சரக்குக் கட்டணம் தவிர்ந்த ஏதேனும் கட்டணத்தை இலங்கையிலுள்ள இறக்குமதியாளர் ஒருவரிடமிருந்து அறவிடுதலாகாது.

ஆயின், எவ்வாறாயினும், உரிமமளிக்கப்பட்ட எவரேனும் சேவை வழங்குநர், இலங்கை ரூபாக்களில் செலுத்தப்படற்பாலதாக இருக்க வேண்டியதான ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணமொன்றை இறக்குமதியாளரிடமிருந்து அறவிடலாம்.

5. (1) உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் ஒருவரினால் ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணமொன்று அவ்வாறு அறவிடப்படுமிடத்து, அத்தகைய வழங்குநரினால் அப்போதைக்கு அறவிடப்பட்ட ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத் தொகையானது, (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பதிவு நோக்கங்களுக்காக வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட எவரேனும் சேவை வழங்குநர் ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத் தொகையை அதிகரிப்பதற்கு உட்கருதினால், அத்தகைய அதிகரிப்பை ஆவணமுறையான சான்றுடன் சேர்த்து அதன் சார்பிலான விண்ணப்பமொன்று பணிப்பாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர், அவசியமெனக் கருதப்படும் முறையான விசாரணையின் பின்னர் –

(அ) ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதன் மேல் ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத்தின் உத்தேசிக்கப்பட்ட அதிகரிப்பை ஏற்றுக் கொள்ளலாம் ; அல்லது

(ஆ) ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத்தின் உத்தேசிக்கப்பட்ட மீளாய்வை நிராகரிக்கலாம் ; அல்லது

(இ) நியாயமானதென அவர் கருதுகின்ற ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத்தின் மாற்று அதிகரிப்பொன்றை முன்மொழியலாம்.

(4) இரண்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்ட திகதியிலிருந்து நாட்பத்தைந்து (45) வேலை நாட்களினுள், பணிப்பாளரின் முடிபு, அத்தகைய முடிபுக்கான காரணங்களுடன், இயைபான உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் அது, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநரைப் பிணிப்பதாதல் வேண்டும்.

6. உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் எவரும், ஏற்று பொருட் பட்டியலில் அல்லது கப்பற் சரக்கனுப்புநரின் கப்பற் சரக்குப் பற்றுச்சீட்டில் குறித்துரைக்கப்பட்டவாறு புறப்படுமிடத்திலிருந்து சேரிடம் வரைக்கும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்காக ஒழுங்குவிதி 3 (1) இற்கமைவாக ஏற்றுமதியாளர் ஒப்பந்த ரீதியில் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணம் தவிர்ந்த ஏதேனும் கட்டணத்தை இலங்கையிலுள்ள ஏற்றுமதியாளர் ஒருவரிடமிருந்து அறவிடுதலாகாது.

7. (1) இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட கொள்கலனிலிடப்பட்ட கப்பற் சரக்கு மீதான கட்டண அமைப்பு முறைக்கு முரணாகவுள்ளதும் மற்றும் உரிமமளிக்கப்பட்ட அத்தகைய சேவை வழங்குநரைப் பிணிப்பதுமான, இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஏலவேயுள்ள ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு இணங்க உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநரொருவரினால் விதிக்கப்பட்ட கட்டணங்களின் ஏதேனும் அமைப்புமுறை, அந்த ஒப்பந்த முடிவுறும் திகதி வரை அல்லது 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் 30 ஆந் திகதிவரை, இவற்றுள் எத்திகதி முந்தியதாகவுள்ளதோ அத்திகதி வரை, செயற்படுத்தப்படலாம்.

(2) ஒராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியொன்று இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிந்து இரண்டு (02) வாரங்களினுள், உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநரினால் பணிப்பாளரிடம் கோப்பிடப்படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட கொள்கலனிலிடப்பட்ட கப்பற் சரக்கின் மீதான கட்டணங்களுக்கு முரணாகவுள்ள கட்டணங்களின் அமைப்பு முறையைக் கொண்டுள்ளதும், 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் 30 ஆந் திகதிக்குப் பின்னர் நடைமுறையில் உள்ளதுமான ஏதேனும் ஏலவேயுள்ள ஒப்பந்தம், இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துமாறு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு மீளாய்வு செய்யப்படாத ஏதேனும் ஒப்பந்தம், 2014, ஏப்பிறல் 30 ஆந் திகதியிலிருந்து, இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் அளவுக்கு வெற்றானதும் வறிதானதுமெனக் கருதப்படுதல் வேண்டும்.

1 - 494

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.